செ.வெ.எண்: 48 / பிப்ரவரி நாள்: 23.02.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## கால்நடைகளைத் தாக்கும் கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசி பணிகள் நடைபெறவுள்ளது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

கால்நடைகளைத் தாக்கும் கால் மற்றும் வாய் கோமாரி நோயானது குறிப்பாக கலப்பின மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது. மேலும் இந்நோயினால் கறவை மாடுகளின் பால் உற்பத்தி குறைவு, எருதுகளின் வேலைதிறன் குறைவு, கறவைமாடுகளின் சினைப்பிடிப்பு தடைபடுவது, இளங்கன்றுகள் இறப்பு போன்றவை ஏற்படுகிறது.

இந்நோயினைக் கட்டுபடுத்த மாவட்டத்தில் இதுவரை 9-வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்பொழுது கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயினைக் கட்டுப்படுத்த 10-ஆவது சுற்று தடுப்பூசிப் பணிகள் 01.03.2016 முதல் 21.03.2016 வரை 3 வாரங்கள் நடைபெறவுள்ளது. தடுப்பூசிப் பணிகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மாவட்டம் முழுவதும் உள்ள ஊராட்சிகளில் கால்நடை வளர்ப்போர்கள் தங்களது மாட்டினங்களை தவறாது தடுப்பூசி போடும் இடத்திற்கு கொண்டு வந்து தடுப்பூசி போட்டு அனைவரும் பயன்பெற வேண்டுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**